2020 செப்டம்பர் 15]

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I am raising a point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஈ) 16–9–2020 அன்று துணை நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யவிருக்கும் நிலையில், கொரோனா பேரிடர் தடுப்பு நடவடிக்கைகளுக்கான செலவினங்கள் குறித்து இன்று (15–9–2020) நிதியமைச்சர் தெரிவித்தல் குறித்து

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நாளைக்கு supplementary budget–ஐப் படிக்கப் போகிறார். அந்த supplementary budget–ல்தான் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கிய பணம் போதாமல் வேறு காரணங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதிகளைப் பற்றிய விஷயங்களைப் பேச வேண்டும். ஆனால், நாளைக்கு துணை நிதிநிலை அறிக்கை, supplementary budget–ஐப் படிக்கவிருக்கும்போது, அதை இப்போது படித்தார் என்றால், it is a privilege. அதைப்பற்றி கேட்டால்கூடச் சொல்லக் கூடாது. 'நாளைக்குப் பார்க்கலாம்' என்று சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்தான் இங்கே கேள்வியாகக் கேட்டார்கள். 'நான் கேட்டேன், நீங்கள் சொல்லவில்லை, தெரிவிக்கவில்லை' என்று சொன்னார்கள். அதனால் கொரோனா பேரிடர் காரணமாக, கொரோனா நோய் பரவாமல் கட்டுப்படுத்துவதற்காக அரசு எடுத்த நடவடிக்கைகளை, மருத்துவத் துறை மூலமாக. . . (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: நீங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்பதையெல்லாம் நான் ஒப்புக்கொள்கிறேன். அதில் நான் குறுக்கிடவில்லை.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: நாளை துணை மதிப்பீடுகளில் வருவதை நான் சொல்லவில்லை. கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளை மட்டும்தான் நான் குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். அவர் கேட்ட கேள்விக்குப் பதில். இதில் supplementary budget–க்கே சம்பந்தம் இல்லை.

[*2020 செப்டம்பர் 15*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–15

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது ஒவ்வொன்றையும் குறிப்பிட்டுச் சொன்னார். இதில் இவ்வளவு வந்திருக்கின்றது; எவ்வளவு செலவு செய்தீர்கள் என்று கேட்டார். அதற்குத்தான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். ஆக, அவர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்கிறார். இதில் எந்தவித point of order–ம் வருவதற்கு வாய்ப்பில்லை. கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறீர்கள். அது பதிவாகியிருக்கிறது. அதற்குப் பிறகு அவர் பதில் சொல்ல வேண்டுமல்லவா? பதில் சொல்லவில்லையென்றால் அது பத்திரிகையில் வராது. இது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் கேள்வி கேட்டதுதான் பத்திரிகையில் வரும். ஆனால், அதற்குப் பதில் வரவில்லை என்றால், அரசின்மீது தவறான எண்ணம் மக்களுக்கு வந்துவிடும். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் விளக்கம்தான் கேட்கிறார். அந்த விளக்கத்தைத்தான் நாங்கள் சொல்கிறோம். ஒவ்வொன்றையும்பற்றி குறிப்பிட்டு, குறிப்பிட்டு கேட்கிறார். முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு எவ்வளவு வந்திருக்கிறது. . . (குறுக்கீடு) ஒவ்வொரு குறிப்புகளையும் எடுத்துப் பாருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்ன கேட்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துப் பாருங்கள். அதுகுறித்துத்தான் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பதிலளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களும், சட்டமன்ற எதிர்க்கட்சிக் கொறடா அண்ணன் திரு. சக்கரபாணி அவர்களும், சட்டமன்ற எதிர்க்கட்சி துணைக் கொறடா திரு. பிச்சாண்டி அவர்களும் இங்கே ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பு

2020 செப்டம்பர் 15] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கவன ஈர்ப்பு அறிவிப்பில் என்ன கேட்டிருக்கிறார்கள் என்றால், 'சட்டமன்றப் பேரவை விதி 55–ன்கீழ் கீழ்க்காணும் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்' என்று கேட்டிருக்கிறார்கள்:

"கொரோனா பேரிடரின் காரணமாக நிதிநிலை அறிக்கையில், அதாவது 2020–2021 ஆம் ஆண்டு அறிவித்த திட்டங்களை மறுபரிசீலனை செய்து நிதி ஒதுக்கீடு செய்வது தொடர்பாக" விவாதிப்பது குறித்து ஒரு கடிதம் கொடுத்திருக்கிறார்கள். இதுகுறித்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, இதே கருத்தை வலியுறுத்தி, அவர் தனக்கு இங்கே யாரும் பதில் சொல்லவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னதனால், கொரோனா தடுப்பு நடவடிக்கை குறித்தும், அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது என்பது குறித்தும்தான் இப்போது நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். கொரோனா உட்பட மற்ற திட்டங்களுக்கு அரசு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்பதனை நாளை விரிவாகச் சொல்லவிருக்கிறேன் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு சார்பாக கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் என்னென்ன எடுக்கப்பட்டன என்பது குறித்து சொல்லக் கூடாத ஒரு நிலையை உருவாக்குவது மாதிரி நீங்கள் பேசினீர்கள். (குறுக்கீடு) எப்படியாவது தடுத்து நிறுத்தலாம் என்று பார்க்கிறீர்கள். அது முடியாது.

கொரோனா சம்பந்தப்பட்டவை குறித்து மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் கொள்முதல் குறித்து மட்டும் பேசுகிறேன். மற்றவற்றை நாளைக்குச் சொல்கிறேன்.

4. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

தமிழகத்தில் கொரோனா நோய்த் தொற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள்—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் கொள்முதல்களுக்காக 830.60 கோடி ரூபாய், மருத்துவக் கட்டுமானப் பணிகளுக்காக 147.10 கோடி ரூபாய், கூடுதலாக நியமிக்கப்பட்ட சுகாதாரப் பணியாளர்களுக்கான சம்பளம் மற்றும் ஏற்கெனவே உள்ள பணியாளர்களுக்கான உணவு மற்றும் இதர ஊக்க செலவினங்களுக்காக 243.50 கோடி ரூபாய், கொரோனா தடுப்பு மற்றும் சிகிச்சைக்கான